A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 74 / 2021**

திரு. R. கண்ணன்,
113, லில்லி தெரு, சோழன்நகர்,
ராம்ஜிநகர் அஞ்சல், திருச்சி – 620 009.

………மேல்முறையீட்டாளர்
(திரு. R. கண்ணன்)

எதிர்

செயற்பொறியாளர்/இ.கா/கீரனூர்,
புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
RM கல்யாண மண்டபம், வடக்கு கார் தெரு,
கீரனூர், புதுக்கோட்டை மாவட்டம் – 622 502.

…… எதிர்மனுதாரர்
(திரு A. முருகன், செயற்பொறியாளர்/இ.கா/கீரனூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 20-09-2021**

**கேட்புரை நாள்: 16-11-2021**

**ஆணை நாள்: 03-02-2022**

20.09.2021 அன்று பெறப்பட்ட திரு. R. கண்ணன், 113, லில்லி தெரு, சோழன்நகர், ராம்ஜிநகர் அஞ்சல், திருச்சி – 620 009 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 74/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 16.11.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

விராலிமலைக்கு உட்பட்ட ஈஸ்வரன் கோவில் கிராமத்தில் உள்ள தனது நிலத்திற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

## 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனது நிலத்திற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி உதவி பொறியாளர்/விராலிமலை அவர்களுக்கு விண்ணப்பித்ததாகவும், பின்னர் செயற்பொறியாளர் அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் ஆவணங்கள் சமர்ப்பித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 தான் பலமுறை செயற்பொறியாளர்/கீரனூர் அவர்களிடம் முறையீடு செய்தும் இது நாள் வரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்பதால் மேல்முறையீட்டாளர் புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 01.10.2020 அன்று அணுகியுள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம் 28.07.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 மன்றத்தின் தீர்வு:

புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 28.07.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**மன்றத்தின் தீர்வு**:*

*மனுதாரர் விவசாய மின் இணைப்பு வேண்டி பதிவு எண் 407 நாள் 12.01.1995-ல் பதிவு செய்துள்ளதாகவும் அதற்குண்டான தயார் நிலை பதிவு செய்ய வேண்டி எதிர் மனுதாரர் வழங்கிய அறிவிப்பு கடிதம் பெற்றுக்கொண்டதாகவும், அது தொடர்பாக மனுதாரர் அனைத்து ஆவணங்களையும் வழங்கி விட்டதாகவும்,*

*வழங்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் தனக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்கள்.*

*எதிர்மனுதாரர், மனுதாரருக்கு வழங்கிய தயார் நிலை பதிவு அறிவிப்பு கடிதத்தில் கூறியுள்ளது போல் 3.12.2010 தேதிக்குள் தயார் நிலை பதிவு செய்ய எவ்வித ஆதாரமோ அல்லது கால நீட்டிப்பு வேண்டி மனு செய்ததற்கான ஆதாரமோ இல்லை என்பது வாதங்களின் அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையில் அறிய முடிகின்றது.*

*மேலும், CE/P&RC அவர்களின் உத்தரவு Lr.No.SE/REID/EE/RE/AIF.Doc/ D.624/12, dt. 23.06.2021 ஆணையின்படி, எந்தவிதமான கால நீட்டிப்பும் ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் செய்ய இயலாத நிலையில், மனுதாரரின் கோரிக்கை ஏற்று தயார் நிலை பதிவு செய்ய இயலாத நிலையில், மனுதாரருக்கு விவசாய மின் இணைப்பு வழங்க விதிமுறைகளின்படி வழிவகையில்லை என நுகர்வோரிடம் தெரிவிக்கப்பட்டது. எனவே இம்மனு மீது மேல்நடவடிக்கை தேவையில்லை எனக்கருதி இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 16.11.2021 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. R. கண்ணன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு A. முருகன், செயற்பொறியாளர்/இ.கா/கீரனூர், புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான

ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 தான் சமர்ப்பித்த விண்ணப்பத்திற்கு செயற்பொறியாளர் (இ.ப), கீரனூர் அவர்களின் பேரில் மின்மோட்டார் இணைப்பு தயார் நிலை பதிவு செய்ய வேண்டிய ஆவணங்களை அனைத்தும் நேரில் கொடுத்து பதிவு செய்ததாகவும், மேலும் ஆவணங்கள் அடிப்படையில் நிலம் மற்றும் கிணறு உள்ள இடம் (location) செயற்பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 எனினும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும், எனவே பலமுறை உதவிப்பொறியாளர், விராலிமலை (தெற்கு) அவர்களை அணுகியதாகவும், இதையடுத்து செயற்பொறியாளர், கீரனூர் அவர்களிடம் முறையீடு செய்ததாகவும், தனது எதிரிலேயே கீரனூர் அலுவலகம் மற்றும் விராலிமலை அலுவலகத்தில் ஆவணங்களை எடுக்க முயன்றும் கிடைக்கவில்லை எனவும், பின் தேடி எடுத்து தயார்நிலை கடிதம் (Rediness Report) அனுப்புவதாக கூறியதாகவும், ஆனால் பலமுறை தொடர்பு கொண்டபோது ஆவணங்கள் கிடைக்கவில்லை எனக்கூறி விட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 எனவே தலைவர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சென்னை அவர்களுக்கு இருமுறை 20.02.2016 மற்றும் 30.10.2020–இல் விண்ணப்பித்ததாகவும் அவைகளின் அடிப்படையில் விராலிமலை (தெற்கு) நேரில் வரச்சொல்லி விளக்கங்கள் கேட்ட போது தனது விண்ணப்பமும் ஆவணங்களும் கிடைக்கப் பெறவில்லை என கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 இந்நிலையில் தலைவர், புதுக்கோட்டை/மின் நுகர்வோர் குறைதீர்மன்றம் அவர்களுக்கு 01.10.2020–இல் விண்ணப்பித்ததாகவும், குறைதீர்க்கும் மன்றம் கூட்டம் 14.07.2021–ல் நடைபெற்றதாகவும், மன்றத்தில் தனது விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாமை பற்றிய பலமுறை முறையீடு செய்து முன்கூட்டியே கொடுத்துள்ள 10 ஆவணங்களின் உண்மை நகல்களை அவரிடம் சமர்ப்பித்ததாகவும், எனவே இந்த ஆவணங்களை கொண்டு மின் இணைப்பு வழங்க ஏற்றுக் கொள்வதாக பொறியாளர்

திரு.த.செந்தில்குமார் (மன்ற தலைவர்) மற்றும் திருமதி D.லதாஉத்தமன் (உறுப்பினர்) உறுதி அளித்ததாகவும், ஆனால் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் மின் இணைப்பு வழங்க அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்று கூறியதால் மேல்முறையீடு செய்யுமாறு கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்ப்பு ஆணையினை 11.09.2021–இல் அஞ்சல் தபாலில் பெற்று ஆனால் குறிப்பிட்டுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை எனவும், ஆணை கடிதத்தில் "தயார் பதிவு செய்ய கடிதத்தில் கூறி உள்ளதுபோல் 03.12.2010–தேதிக்குள் தயார்நிலை பதிவு செய்ததாக எவ்வித ஆதாரம் இல்லை" என்று கூறி முடித்துள்ளதாகவும் ஆனால் தமிழ்நாடு அரசு மேலும் ஒருமாத கால நீட்டிப்பு வழங்கியது என்பதை அவர்கள் தெரிந்து இருக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 தனது விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை அலுவலகத்தில் கிடைக்கப் பெறாமையால் தவறான காரணங்கள் கூறி மின் இணைப்பு வழங்குதலை தவிர்ப்பதாகவும், எனவே தாங்கள் தயவுசெய்து உண்மையினை அறிந்து மின் இணைப்பு வழங்க ஆணையிடுமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 எதிர்மனுதாரரின் வாதங்கள்:**

6.1 திரு.R.கண்ணன், 113, லில்லி தெரு, சோழன் நகர், ராம்ஜி நகர் (S.O), திருச்சி அவர்கள் உதவி மின்பொறியாளர்/இயக்குதலும் காத்தலும்/ தெற்கு / விராலிமலை பிரிவிற்கு உட்பட்ட ஈஸ்வரன் கோவில் கிராமத்தில் உள்ள நிலத்திற்கு விவசாய மின்னிணைப்பு வேண்டி சமர்ப்பித்த விண்ணப்பம் பதிவு எண் 407 நாள் 12.01.1995–ல் பதிவு செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 அதற்கு கடித எண் செயற்பொறியாளர்/இ,கா/கீரனூர்/தொ.நு.உ/ அ.எண்.711/2020 நாள்:28.10.2010 கடிதம் வாயிலாக, தயார் நிலை 03.12.2010–க்குள் பதிவு செய்திட அறிவுப்பு கடிதம் வழங்கப்பட்டதாகவும், மேலும் அறிவுப்பு கடிதத்தில் கூறியுள்ளது போல் மனுதாரர் காலநீட்டிப்பு வேண்டி எவ்வித மனுவும் 03.12.2010–க்குள் வழங்கவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மனுதாரர் செயற்பொறியாளர்/இயக்குதலும் காத்தலும்/ கீரனூர் அவர்கள் வழங்கிய அறிவுப்புக் கடிதத்தை பெற்றுக்கொண்டதாகவும், அது தொடர்பாக மனுதாரர்

அனைத்து அவணங்களையும் வழங்கிவிட்டதாகவும், வழங்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் தனக்கு மின்னிணைப்பு வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 ஆனால் மனுதாரருக்கு வழங்கிய தயார்நிலை பதிவு அறிவிப்பு கடிதத்தில் கூறியுள்ளதுபோல் 03.12.2010 தேதிக்குள் தயார்நிலை பதிவு செய்ய எவ்வித ஆதாரமோ அல்லது காலநீட்டிப்பு வேண்டி மனு செய்ததற்கான ஆதாரமோ இல்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும் CE/P&RC அவர்களின் உத்தரவு Lr.No.SE/REID/EE/RE/AIF.Doc/ D.624/12, dt. 23.06.2012 ஆணையின்படி, எந்தவிதமான கால நீட்டிப்பும் ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் செய்ய இயலாத நிலையில், மனுதாரரின் கோரிக்கையை ஏற்று தயார் நிலை பதிவு செய்ய இயலா நிலையில் மனுதாரருக்கு விவசாய மின்னிணைப்பு வழங்க விதிமுறைகளின்படி வழிவகை இல்லை எனவும், எனவே மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்ய உத்தரவிடுமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் புதிய விவசாய மின் இணைப்பு வேண்டி பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தின்பேரில் தயார் நிலை பதிவு செய்யும்படி 28.10.2010 தேதியிட்ட கடிதம் பெற்றதாகவும், அதன்பொருட்டு அனைத்து ஆவணங்களையும் நேரில் கொடுத்ததாகவும், ஆவணங்களின் அடிப்படையில் செயற்பொறியாளர் களஆய்வு செய்யப்பட்தாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் மின் இணைப்பு வழங்காததால் உதவி பொறியாளர்/விராலிமலை (தெற்கு) மற்றும் செயற்பொறியாளர்/கீரனூர் அவர்களிடம் முறையிட்டதாகவும், தான் சமர்ப்பித்த ஆவணங்கள் அலுவலகத்தில் தேடி கிடைக்கவில்லையென எதிர்மனுதாரர் தெரிவித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் மனு கொடுத்ததாகவும், தயார் நிலை பதிவு செய்ததாக ஆதாரம் இல்லையெனவும், அறிவிப்பு வழங்கி ஐந்து ஆண்டுகள் முடிந்து விட்டதனால் மின்

இணைப்பு வழங்க இயலாதென ஆணை பிறப்பித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளர் திரு.கண்ணன் அவர்கள் விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பதிவு எண் 407, நாள் 12.01.1995–இல் பதிவு செய்யப்பட்டதாகவும், 28.10.2010 நாளிட்ட கடிதம் வாயிலாக தயார் நிலை 03.12.2010–க்குள் பதிவு செய்திட அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டதாகவும், தயார் நிலை பதிவு அறிவிப்பு கடிதத்தில் கூறியுள்ளபடி 03.12.2010 தேதிக்குள் தயார் நிலை பதிவு செய்ததாக எவ்வித ஆதாரமோ அல்லது காலநீட்டிப்பு வேண்டி மனு செய்ததற்கான ஆதாரமோ இல்லையென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் உரிமம்தாரர் CE/P&RC அவர்களின் ஆணையின்படி தயார் நிலை பதிவு செய்ய 90 days + 5 years கால அவகாசம் தரலாமென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். தயார் நிலை பதிவு செய்ய அறிவிப்பு செய்து அனுப்பிய கடிதம் 5 வருடம் 90 நாட்கள் காலகெடு முடிவடைந்த நிலையில் தயார் நிலை பதிவு செய்யாத விவசாய விண்ணப்பத்தை ரத்து செய்யப்பட்டதாக எவ்வித கடிதமும் அனுப்பப்பட்டதற்கான ஆதாரம் தங்களிடம் இல்லையென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 தயார் நிலை பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள காலக்கெடு சம்பந்தமாக தலைமை பொறியாளர் திட்டமிடல் அவர்களின் 20.09.2009 நாளிட்ட சுற்றறிக்கை கடிதத்தில் கூறப்பட்டுள்ள தேவையான பத்திகளின் உண்மை நகல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *“1. In cases of delay in reporting readiness of agricultural applications even beyond the extended period of one year, extension of time may be given to the original applicant/ legal heirs, as the case may be for entering readiness upto 5 years from the date of expiry of 90 days notice period once the party has attained the normal seniority. However, this should not be applicable to purchaser of the land who purchases the land after expiry of 90 days notice.*
>
> *2. The applications which were kept pending (except court case/ dispute case after completing 5 years from the date of expiry of 90 days notice period may be cancelled and intimated to the applicant.*
>
> *3. Cancelled applications need not be revoked.*
>
> *4. Applicants whose applications released / readiness entered, but supply was not availed due to court case / dispute supply may be effected without any time limit, if the case is ended in favour of the applicant on priority. The receipt of this letter may be acknowledged.”*

7.5 மேற்கண்ட ஆணையினை கூர்ந்து படிக்கும்போது நாம் அறிவது, ஒரு விவசாய மின் இணைப்பு வேண்டும் விண்ணப்பதாரர் தன்னுடைய தயார் நிலையை பதிவு செய்யாத பட்சத்தில் 90 நாட்கள் அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டு 5 வருடங்கள் கழிந்த விவசாய விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அவ்வாறு ரத்து செய்த விவரம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிகிறது. இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாகவோ, அவ்வாறு ரத்து செய்யப்பட்டதாக மேல்முறையீட்டாளருக்கு தெரிவித்ததாகவோ எந்தவொரு ஆவணமும் எதிர்மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்நிலையில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாகக் கருதமுடியாது. எனவே மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுத்து புதியதாக தயார் நிலை அறிவிக்கை கொடுத்து விவசாய மின் இணைப்பு வேண்டும் மேல்முறையீட்டாளருக்கு தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின் படி தேவைப்படும் ஆவணங்களை பெற்றுக் கொண்டு விண்ணப்ப பதிவு எண் 194/19.07.1997–க்கு மின் இணைப்பு வழங்குமாறு தீர்வு செய்கிறேன்.

7.6 மேலும், தயார்நிலை கடிதம் பெற்றவுடனேயே தேவையான/கீழ்க்கண்ட அனைத்து ஆவணங்களும் கொடுத்துவிட்டதாக தெரிவித்துள்ளார்.

1. விவசாய மின் இணைப்பிற்கான படிவம்
2. விவசாய படிவம் – 2
3. வட்டாட்சியர் சான்று
4. கணினி பட்டா உட்பிரிவு சான்று
5. நிலம், கிணறு வரைபடம்
6. நில ஆவண பட்டா
7. நிலவரி ரசீது
8. கிணறு மற்றும் நிலம் நான்கு எல்லைகள்
9. கிராம நிர்வாக அலுவலரின் அடங்கல்
10. நிலத்தின் கிரைய பத்திரம்

இவ்வாவணங்களில் பெரும்பாலானவை 10/2010 முதல் 12/2010 வரையிலான தயார் நிலை அறிவிப்புக்கு ஒட்டிய காலத்தில் பெறப்பட்டதும் அறிய முடிகிறது. இவற்றை மின்குறைதீர்ப்பாளர் முன் நகலாகவும் சமர்ப்பித்துள்ளார். இவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்பொறியாளர் கள ஆய்வு செய்ததாகவும், ஆனால் மின் இணைப்பு கொடுக்காததால் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் முறையீடு செய்த பிறகு தங்கள் அலுவலகத்தில் மேற்படி ஆவணங்கள் இல்லையெனவும் தெரிவித்ததால் உரிமம்தாரரின் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவரிடம் 19.02.2016 நாளிட்ட கடிதம் வாயிலாக மனு சமர்ப்பித்ததாகவும் அதன் பிறகும் தங்கள்

அலுவலகத்தில் தேடிவிட்டு மேற்படி ஆவணங்கள் கிடைக்கவில்லையென எதிர்மனுதாரர் தெரிவித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் மனுவிற்கு எழுத்து பூர்வமான பதிலும் எதிர்மனுதாரர் தரவில்லை. மேற்கண்ட ஆவணங்களை மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்ததற்கான ஆதாரங்கள் இல்லையென தெரிவிக்கும் எதிர்மனுதாரர் தயார் நிலை கடிதம் கொடுத்து 5 வருடம் + 90 நாட்கள் காலக்கெடு முடிந்தபின் உரிமம்தாரரின் 20.09.2009 நாளிட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல் கடிதத்தில் கூறியுள்ளபடி மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டு மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாக தங்கள் அலுவலகத்தில் ஆதார ஆவணம் எதுவுமில்லையென்று தெரிவித்துள்ளார். அதாவது 20.09.2009 சுற்றறிக்கையின்படி மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணப்பம் ரத்து செய்து மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்படவில்லையென அறியமுடிகிறது. 1995–இல் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பம் தயார்நிலை பதிவு செய்ய அறிவிப்பு கடிதம் 2010–இல் வழங்கி பதினொன்று வருடங்கள் கழிந்த நிலையிலும் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் ரத்து செய்யப்படவில்லையென அறியமுடிகிறது. அதாவது மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்த ஆவணங்களும் இல்லை, விவசாய விண்ணப்பம் ரத்து செய்ததற்கான ஆதாரமும் இல்லை. விண்ணப்பம் பதிவு செய்து 26 வருடங்கள் கழிந்து விண்ணப்பம் ரத்து செய்யப்படாத நிலையில் தற்போது மேல்முறையீட்டாளருக்கு விவசாய மின் இணைப்பு வழங்க மறுப்பது ஏற்கமுடியாது. 26 வருடங்கள் கழித்து மறுபடியும் புதிய விவசாய விண்ணப்பம் பதிவு செய்யவேண்டுமெனில் தற்போதிலிருந்து மேலும் சுமார் 15 வருடங்கள் மேல்முறையீட்டளார் இலவச மின் இணைப்பு பெற காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும். இத்தகைய நடவடிக்கை சாதாரண விவசாயிக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

## 8.0 <u>முடிவுரை</u>:

8.1 பத்தி 7–இல் உள்ள தீர்வின்படி புதியதாக தயார்நிலை அறிவிக்கை கொடுத்து தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி தேவைப்படும் ஆவணங்களை பெற்றுக்கொண்டு விண்ணப்ப பதிவு எண் 407/12.01.1995–க்கு விவசாய மின் இணைப்பு மேல்முறையீட்டாளருக்கு வழங்குமாறு தீர்வு செய்கிறேன். மேல்முறையீட்டாளர் ஆவணங்களை சமர்ப்பித்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்குமாறு ஆணையிடுகிறேன்.

8.2 மேற்கண்ட ஆணையை நிறைவேற்றியமைக்கான அறிக்கையை மின் இணைப்பு வழங்கிய தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறேன்.

8.3 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 74/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

1. திரு. R. கண்ணன்,
113, லில்லி தெரு, சோழன்நகர்,
ராம்ஜிநகர் அஞ்சல், திருச்சி – 620 009.

2. செயற்பொறியாளர்/இ.கா/கீரனூர்,
புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
RM கல்யாண மண்டபம், வடக்கு கார் தெரு,
கீரனூர், புதுக்கோட்டை மாவட்டம் – 622 502.

3. மேற்பார்வை பொறியாளர், – By email
புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பழைய பேருந்து நிலையம் அருகில்,
புதுக்கோட்டை – 622 001.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.